## தலைப்பு 248 – மது வரித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு

தலைப்பு 248 – மது வரித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 07 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவினமும்

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,054.54 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 812.54 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்தின் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 242.00 மில்லியன் அதாவது 22.95 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 666.62 | 665.08 | 1.54 | 0.23 |
| மூலதனம் | 387.92 | 147.46 | 240.46 | 61.99 |
| மொத்தம் | **1,054.54** | **812.54** | **242.00** | **22.95** |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்கான 2 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 105,035.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 105,297.60 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 100.25 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக மிகை/ (பற்றாக்குறை) |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை/ (பற்றாக்குறை) | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10.02.04.01 | 105,000.00 | 105,263.55 | 263.55 | 0.25 |
| 10.02.06.00 | 35.00 | 34.05 | (0.95) | (2.71) |
| மொத்தம் | **105,035.00** | **105,297.60** | **262.60** | **0.25** |

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 24801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 38.01 | 23.06 | 28.00 | 31.19 | 170.00 | 122.72 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 7002/0000/00/0072/0015/000 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் ரூபா 102.44 மில்லியனாக காணப்பட்டது.

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழான 06 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 395.07 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்கு இல. | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0122/000 | 25.79 |
| 6000/0000/00/0002/0178/000 | 2.71 |
| 6000/0000/00/0016/0126/000 | 3.42 |
| 6000/0000/00/0018/0119/000 | 0.79 |
| 6000/0000/00/0008/0051/000 | 31.80 |
| 6000/0000/00/0006/0060/000 | 330.56 |
| மொத்தம் | **395.07** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

மது வரித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | வாகன பதிவேடு | சம்பவப் நிதிப் பிரமாணம் 1645(அ) | சம்பவப் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

## 3.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 2 வருமானக் குறியீடுகளுக்கு வருமானங்களை மதிப்பீடு தயாரித்தல், வருமானங்களை சேகரித்தல், கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் பணிப்பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகளுக்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) 10-02-04-01 ஆம் இலக்க வருமானக் குறியீடு – மது வரி (மதுபானம்)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதி அமைச்சினால் வருமானக் குறியீட்டுக்குரிய வரி அறவிடல் சதவீதத்தை மீளாய்வாண்டின் ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அதிகரித்தமையால் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 262.60 மில்லியனால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 2,191,178,421 தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன், அந்நிலுவை வருமானம் 1 ஆண்டு முதல் 4 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து இருந்து வந்தது.

(iii) முன்னைய ஆண்டின் உள்ளவாறான வருமானத்தை விட மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 36,175 மில்லியனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது வரி விகிதம் 7 சதவீத்தினால் அதகரித்தமை இவ்வாறு வருமானம் அதிகரிப்பதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### (ஆ) 10-02-06-00 ஆம் வருமானக் குறியீடு – புகையிலை வரி

முன்னைய ஆண்டின் உள்ளபடியான வருமானத்தை விட மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமானம் ஒரு மில்லியனால் குறைவடைந்திருந்தது.

## 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

24801 ஆம் விட இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் படி அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,995,281 ஆக இருந்ததுடன், அந்நிலுவைக் கடன் மீதிகள் 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையிலான கால வீச்சில் இருந்து வந்த போதிலும், அந்த நிலுவை கடன்

மீதிகளை அறவீடு செய்வதன் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) உறுப்பினர் கடன் பதிவேட்டில் (CC 10) உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட இடர் கடன்களுக்குரிய வட்டி மாதாந்தம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் பூரணமற்ற வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 3.4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

அரசின் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட்டு பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 29.8 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது சகல பிரிவுகளையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 இன் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் பிராந்திய அலுவலகங்களினதும் தலைமை அலுவலகத்தினதும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மதிப்பீடு செய்வதில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தின் கட்டளைகள், சட்டங்கள் மற்றும் மது வரி அறிவித்தல்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த பற்றாக்குறைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டிற்குரிய மது வரி வெகுமதி நிதியம் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கீழே விபரிக்கப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்து வகை | | அலகு எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்றதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) | வாகன டயர்கள் | 21 | 241,728 | 05 ஆண்டுகள் |
| (ii) | நூலகப் புத்தகங்கள் | இருப்பொன்று | 97,113 | 03 ஆண்டுகள் |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | 01 | - | 05 ஆண்டுகள் |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துதல்**

மீளாய்வாண்டிற்காக திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அக்கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா நகரங்களில் மது வரி நிலையங்களை நிர்மாணிப்பதற்காக திறைசேரி மானியங்களைப் பயன்படுத்தி மீளாய்வாண்டின் போதும், முறையே ரூபா 25 மில்லியன் மற்றும் ரூபா ரூபா 24 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன. எனினும் அந்நிர்மாணங்கள் அமைந்துள்ள இடங்கள் முறைப்படி கையேற்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மது வரி நிலையங்கள் நடாத்திச்செல்லப்படும் 11 காணிகள் மற்றும் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற இரண்டு வாகனங்கள் என்பவற்றின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத ஓராண்டிற்கு குறைவான காலமாக இருந்து வரும் பொறுப்புக்கள் ரூபா 10,143,723 ஆக இருந்தது.

## 3.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவு | புகையிலை வரி வெகுமதி நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 1998 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் | மது வரி உத்தியோகத்தர்களுக்கும் தகவல்களை வழங்குபவர்களுக்கும் ஏனைய தரப்பினரிற்கும் பரிசுப் பணத்தை செலுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட எழுத்து மூலமான நடைமுறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.7 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) தொழில்நுட்ப குற்றங்களின் சுற்றிவளைப்பு**

மீளாய்வாண்டின் போது 4,932 மது வரி தொழில்நுட்ப குற்றங்களின் சுற்றி வளைப்புக்கள் மூலம் ரூபா 178,507,964 ஆன வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போது 5,319 மது வரி தொழில்நுட்ப குற்றங்களின் சுற்றி வளைப்புக்கள் மூலம் ரூபா 163,101,331 ஆன வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மது வரி தொழில்நுட்ப குற்றங்களின் சுற்றி வளைப்பு வருமானம் ரூபா 15,406,633 ஆல் அல்லது 9 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் சுற்றி வளைப்புக்களின் எண்ணிக்கை 387 ஆல் அல்லது 8 சதவீதிதனால் வீழ்ச்சியடைந்திருந்தது.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) கள்ளு தரவனை அனுமதிப்பத்திரதாரர்களால் குறிப்பிட்ட காலப்பகுதியில் உரிய கள்ளு தரவானை அனுமதிப்பத்திரக் கட்டணங்களை செலுத்துவதாக உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான நடைமுறையொன்று திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மது வரி அறிவித்தலின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் வீரச் செயலொன்றோ அல்லது விசேட ஏற்றுக்கொள்ளல் நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 200,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 1994 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அவ்வாறான செயற்பாடுகளுக்காக திணைக்களத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) புகையிலை அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒவ்வொரு சுருட்டு, பீடி மற்றும் குழாய் புகையிலை கிலோகிராமொன்றுக்காக வரியொன்று விதிக்கப்பட்டு

அறவிடப்பட வேண்டிய போதிலும், பீடி உற்பத்தி நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவ்வாறான வரியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. 590 இற்கு அண்மித்த அளவிலான பீடி உற்பத்தி நிறுவனங்கள் திணைக்களத்தில் பதிவு செய்திருந்ததுடன், அந்நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பக் கட்டணங்கள், பீடி உற்பத்தி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மாத்திரம் அறவிடப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக புகையிலை இறக்குமதி செய்யப்படுகின்ற நிறுவனங்களிடமிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற புகையிலைக்காக உரிய வரித்தொகையையும் செலுத்த வேண்டும். இதன் பிரகாரம் அரசிற்கு கிடைக்க வேண்டியதாக காணப்படும் வருமானம் இழக்கப்படுவதுடன், மீளாய்வாண்டில் 26 பீடி உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் புகையிலை பாவனை 320,000 கிலோ கிராம்களாகும். அதன் பிரகாரம் அரசிற்கு ரூபா 3,200,000 ஆன அளவிலான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. பதிவுசெய்யப்பட்ட 590 நிறுவனங்களைக் கருத்திற் கொண்ட போது இவ்வாறு வருடாந்தம் பாரியளவு வருமானமொன்று அரசிற்கு இழக்கப்பட்டிருந்தது.

(iv) பீடி உற்பத்தி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்ததன் பின்னர் அதிகமான உற்பத்தியாளர்களால் மீண்டும் பதிவினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. மீளாய்வாண்டின் போது பதிவினைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத 10 நிறுவனங்கள் காணப்பட்டதுடன் அந்நிறுவனங்களில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இருந்தமைக்கான உறுதிப்பாட்டை திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.8 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்துவதிலுள்ள குறைபாடு

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

வங்கிக் கணக்கிற்கு நேரடியாகக் கிடைக்கின்ற பணம் முறையாக இனங்காணப்பட்டு உரிய வருமானக் குறியீடுகளுக்கு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 53,236,762 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத வைப்புக்கள் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. இத்தொகையில் ரூபா 2,633,125 தொகை மீதியொன்று 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) உற்பத்தி கூடத்திலிருந்து மதுபானத்தை விநியோகிக்கும் போது உரிய மது வரி ஆணையாளர் அலுவலகத்திற்கு பட்டியலின் பிரதிகள் வழங்கப்பட வேண்டிய போதிலும், ஒரு உற்பத்தி கூடத்தினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அனுமதிப்பத்திர நிலையப் பரிசோதனைக்கு சமூகமளிக்கும் உத்தியோகத்தர்கள் அந்த பட்டியல்களின் பிரதிகளை எடுத்து வந்து உரிய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாதிருந்தமை மது வரி நிலையங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. ஆதலால் அனுமதிப்பத்திரங்கள் உள்ள நிலையத்திற்கு கிடைக்கும் மதுபான பெறுவனவுகள் மற்றும் விநியோகங்கள் தொடர்பான அறிக்கைகளின் சரியானதன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாதாந்த பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் அரையாண்டு பகுப்பாய்வு அறிக்கை என்பன பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென திணைக்கள கட்டளை மூலம் கோரப்பட்டிருந்தது. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 03 உற்பத்தி கூடங்கள் தொடர்பாக அந்நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மதுபானத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட செறிவு அளவு நிர்ணயிக்கப்பட்ட விதந்துரைகளுக்கு இணங்க அமைந்துள்ளதா என உறுதிப்படுத்துவது சிக்கல்வாய்ந்ததாக இருந்தது.

(இ) மது வரி அனுமதிப்பத்திரமொன்றை புதுப்பிப்பதற்கு முன்னர் தொழில்நுட்ப குற்ற அறிக்கைள் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும், கொழும்பு விசேட செயற்பாட்டு பிரிவில் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை தீர்வு செய்யப்படாத தொழில்நுட்ப குற்றங்களின் எண்ணிக்கை 70 ஆக இருந்தது. எனினும் அந்த 70 மதுபான அனுமதிப்பத்திரங்களும் திணைக்களத்தினால் புதுப்பிக்கப்பட்டிருந்தன.

**3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மது வரி அறிவித்தல் இலக்கம் 920 இன் பிரகாரம் சுற்றுலா மேம்படுத்தல் அதிகாரசபையின் முன் அங்கீகாரம் மற்றும் கண்காணிப்புடன் சர்வதேச நியமங்களுக்கு இணங்க நடாத்திச் செல்லப்படும் ஹொட்டெல்களுக்காக வைன், பியர் மற்றும் மதுபான வகைகளை உரிய அளவில் பயன்படுத்துவதற்காக விசேட அங்கிகாரமொன்றை திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த மது வரி அறிவித்தலுக்கு முரணாக சுற்றுலா மேம்படுத்தல் அதிகாரசபையின் முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களும் அத்தகைய அனுமதிப்பத்திரங்களுக்காக பரிந்துரை வழங்கியிருந்தனர்.

**3.11 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்தி**

திணைக்களத்திற்குரிய 2014 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த 2.9(4) கணக்காய்வு பந்தி தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.12 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 யூன் 21 ஆந் திகதிய 937 ஆம் இலக்க மது வரி அறிவித்தலுக்கு முரணாக மதுபான இறக்குமதியின் பேரில் வரி மீளளிப்பாக ரூபா 21,850,907 வழங்கப்பட்டிருந்தது. 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் உரிய கம்பனிகளிடமிருந்து ரூபா 16,867,546 தொகை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய தொகையான ரூபா 4,983,361 ஐ 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்குரிய சீருடைத் துணி மற்றும் காலணி இருப்பு என்பன 2015 செப்தெம்பர் 25 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த இருப்புக்கள் விநியோகம் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் போதும் உத்தியோகத்தர்களின் சீருடை மற்றும் காலணி தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(இ) 2011 மே 31 ஆந் திகதிய 936 ஆம் இலக்க மது வரி அறிவித்தலின் கீழ் சுற்றுலா மேம்படுத்தல் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட ஹொட்டெல்களுக்காக வைன், பியர் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு இணங்க மதுபான விற்பனைக்காக விசேட அங்கீகாரமொன்று வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் அந்த ஹொட்டெல்கள் தொடர்பாக முறையான மேற்பார்வையொன்று 2011 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31

ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) திணைக்களத்திற்குச் சொந்தமான பஸ் வண்டி 2010 நவம்பர் 10 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்ததுடன், அதன் திருத்த வேலைகளுக்காக ரூபா 590,450 செலவிடப்பட்டிருந்தது. இவ்விபத்து தொடர்பான நட்டத்தை வெளித் தரப்பினருக்குரிய காப்புறுதிக் கம்பனியிடமிருந்து அறவிடுவதற்கு நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது, எனினும் குறித்த காப்புறுதிக் கம்பனியால் ரூபா 116,120 ஐ இழப்பீடாக செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்க முன்மொழிவிற்கு திணைக்களத்தினால் இணங்கியதன் காரணமாக ரூபா 474,330 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

(உ) திணைக்களத்திற்குச் சொந்தமான வேன் வண்டியொன்று விபத்திற்குட்பட்டு 2015 சனவரி 26 ஆந் திகதி திருத்த வேலைகளுக்காக முகவர் கம்பனிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. திருத்த வேலைகள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் அவ்வாகனம் திணைக்களத்திற்கு 2016 சனவரி 22 ஆந் திகதி கிடைக்கப்பெற்றிருந்தது. அதன் பிரகாரம் திருத்த வேலைகளுக்காக ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், தாமதம் தொடர்பாக திணைக்களத்தினால் எவ்வித காரணமும் ஆராய்ந்து பார்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மதுபான கைத்தொழில் வழிகாட்டியின் 2 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் பிரகாரம் மது வரி ஆணையாளரால் தமது அதிகாரப் பிரதேசத்திற்குரிய குதம்களின் புத்தகங்களைப் பரீட்சித்தல் உட்பட புத்தகங்களின் மீதிகளும் ஏனைய மீதிகளுடன் ஒப்பிடப்பட்டு சரி பிழைகள் பரீட்சிப்பு மாதாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் அவதானிக்கப்பட்டது.

### 3.13 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியிரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 57 | 41 | 16 |
| (ii) | மூன்றாம் நிலை | 380 | 300 | 80 |
| (iii) | இரண்டாம் நிலை | 860 | 589 | 271 |
| (iv) | ஆரம்ப நிலை | 169 | 120 | 49 |
| | மொத்தம் | 1,466 | 1,050 | 416 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவியில் நிரந்தரமாக்கப்படாத மது வரி பரிசோதக உத்தியோகத்தரொருவர் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கடற்படையின் தொண்டர் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) திணைக்களத்தில் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்யப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கான சன்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) மது வரி ஒழுங்குபடுத்துபவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு எழுத்துப் பரீட்சை நடாத்தப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி நேர்முகப் பரீட்சையை நடாத்துவதற்கு திணைக்களம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அப்பரீட்சை 2015 திசெம்பர் மாதம் வரை தாமதமாகியதன் காரணமாக திட்டமிடப்பட்டதன் பிரகாரம் மது வரி ஒழுங்குபடுத்துபவர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடியாதிருந்தது.